1981 ஜனவரி 29]

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தலைவரவர்களே மறைந்த பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய நினைவாலயத்தில் புகைப்படங்கள் வைக்கும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் வாழ்க்கையிலே நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை ஓவியங்களாகச் சித்தரித்து அங்கே வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, கிண்டியிலே இருப்பது காமராஜ் அவர்கள் அங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கிற நினைவு மண்டபமாகும். ஆகவே, அந்த இடத்திலே போகும்போது போகிறவர்கள் அதை ஒரு வணக்கத்திற்குரிய இடமாகக் கருதி, வணங்கிவிட்டுச் செல்கிறார்கள். அந்த இடத்திலே எந்த காட்சிப் பொருட்களையும் வைத்து, விழா போல ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்காது. இதே சென்னை மாநகரில் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் திருமலைப்பிள்ளைச் சாலையில் வாழ்ந்துவந்த இல்லத்தை நினைவு இல்லமாக ஆக்கி, அவர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை விளக்கும் புகைப்படங்களையும், அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் அங்கே காட்சிக்கு வைத்து, அவைகளை தினசரி மக்கள் கண்டு செல்கிறார்கள். அங்கே மேலும் ஏதாவது அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் ஆலோசனை சொன்னால் அரசு அதை பரிசீலனை செய்யும்.

திருமங்கலத்திலுள்ள மண் வளப்பாதுகாப்புப் பிரிவு.

*வினா எண் 89 திரு. இரா. முத்தையா, திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது திருமங்கலத்தில் இயங்கிவரும் மண்வளப் பாதுகாப்புத் துறையின் பிரிவு ஒன்றை (உதவி செயற் பொறியாளர் அலுவலகம்) தஞ்சைக்கு மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திருமங்கலத்திலேயே தொடர்ந்து இயங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) 1-8-80 நாளிட்ட அரசு ஆணையில், திருமங்கலத்தில் உள்ள மண்வளப்பாதுகாப்பு துணைக் கோட்டத்தையும், திருவண்ணாமலையிலுள்ள மண்வளப்பாதுகாப்புத் துணைக் கோட்டத்தையும் தஞ்சாவூர் மாவட்டத்துக்கு மாற்றுவதற்கு ஆணையிடப்பட்டது.

(ஆ) திருமங்கலத்திலுள்ள மண்வளப்பாதுகாப்புத் துணைக் கோட்டத்தை தஞ்சைக்கு மாற்றுவதை மறு உத்திரவு பிறப்பிக்கும்வரை நிறுத்திவைக்கும்படி வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, திருமங்கலத்திலே இருக்கிற மண்வளப் பாதுகாப்புத் துறையின் பிரிவு ஒன்றை தஞ்சைக்கு மாற்றுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான்கு மாவட்டங்கள் தாண்டி, அந்தப் பிரிவை தஞ்சைக்கு எடுத்துச்செல்வதாக இருந்தால் திருமங்கலம் பகுதி மக்களுக்கு அது பெருத்தக் குறையாக இருக்கும். ஆகவே, அந்தப் பிரிவை அந்தப் பகுதி மக்கள் வசதியைக் கருதி, நிரந்தரமாக அங்கே ஏற்படுத்துவதற்கு அரசு உத்தரவாதம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இந்த நீர் பராமரிப்புப் பணியை ஒட்டி, அந்த வேளாண்மை அலுவலகத்திற்கு இதை மாற்ற வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்டம் திருமங்கலம் விவசாயப் பெருமக்களுக்கு அதிக அளவில் பயன்படுகிறது என்ற காரணத்தைக்காட்டி, அதை மாற்றக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் சித்தன், ஆண்டித் தேவர் போன்றவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆணையிட்டுள்ளேன். இப்போதுள்ள நிலைமைகளைக் காணும்போது, மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் சொன்னதைப் போல அங்கே நிரந்தரமாக நிறுத்தி வைப்பதுபற்றிய செயற்குறிப்பு பற்றி அரசு ஆராயும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அமைச்சரவர்கள் தற்காலிகமாக தடை விதித்திருப்பதாகச் சொன்னார்கள். முன்பு அதை மாற்றுவதற்கான காரணத்தைச் சொல்லும்போது அங்கே அதிக விவசாயிகளுக்குப் பயன்படவில்லை என்று முதலிலே சொன்னார்கள். அதனால்தான் தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு இருந்ததாகச் சொன்னார்கள். திருமங்கலம் விவசாயத்துறையிலே பின்தங்கிய பகுதியாகவும், வறட்சியான பகுதியாகவும் இருப்பதால், அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு இந்த மண்வள பாதுகாப்புப் பணி பிரிவு நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை நானும் கண்டிருக்கிறேன்; திரு. ஆண்டித்தேவர் அவர்களும் கண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பிரிவை மாற்றாமல் நிரந்தரமாக அங்கே நிறுவுவதற்கு ஆணையிடப்படுமா? அதோடு தஞ்சை மாவட்டத்திற்கு தனியாக ஒரு பிரிவை நிறுவ உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, திருமங்கலத்திலுள்ள மண்வளப் பாதுகாப்புப் பிரிவு நல்ல முறையில் செயல்படுகிறது என்று சான்றளித்ததற்காக நன்றி. அந்தப் பிரிவை அங்கே நிரந்தரமாக வைப்பது பற்றி அரசு ஆராயும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தற்போது திருமங்கலத்தில் இருந்துவரும் மண்வள பாதுகாப்புப் பிரிவை தஞ்சை மாவட்டத்திற்கு மாற்றியமைக்க ப்பதாக அமைச்சரவர்கள்

சொன்னதை அந்த மாவட்ட உறுப்பினர் என்ற முறையில் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது எப்போது ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பக்கத்தில் இருக்கிற திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினருடைய மனக் குறையை சம்பாதித்துக் கொள்ளாமல், திரு. கிட்டப்பா அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க தனியாக ஒரு பிரிவை அமைக்க அரசு யோசனை செய்யும்.

செய்யாறு மற்றும் அனுக்காவூர் ஒன்றியங்களில் வளர்ச்சிப் பணிகள்.

*வினா எண் 90—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் செய்யாறு மற்றும் அனுக்காவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளை ஏனைய ஊராட்சி ஒன்றியங்கள் போல ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி திட்டம் அல்லது சிறு-விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் இணைத்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 2-10-80 முதல் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வத்தலக்குண்டு ஒன்றியத்தில் சாலைப் பணிகள்.

*வினா எண் 91—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி வத்தலக்குண்டு யூனியன் ராமநாயக்கன்பட்டி—ரெங்கப்பநாயக்கன்பட்டியை இணைத்து வைகையின் குறுக்கே பாலம் அமைத்து புள்ளிமான்கோம்பை வழியாக ஆண்டிப்பட்டிக்கு சாலை அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.